2012 ஏப்ரல் 25]

சொந்தமான TAMIN நிறுவனத்திற்கு கிரானைட் குத்தகை பெற்ற, கற்கள் உற்பத்தி செய்யும் சுரங்கம் ஏதும் அங்கே இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற இடத்தை ஆய்வு செய்து, இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

165—

மகளிர் விடுதி

***556**—**திரு. வி. முத்துக்குமார்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் அரசு கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரியில் ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக மகளிர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் அரசு கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரியில் ஆதி திராவிடர் மாணவியர்களுக்குப் புதிய விடுதி தொடங்கிடத் தேவையான இடம், கட்டமைப்பு வசதிகள் மற்றும் மாணவியர்களின் எண்ணிக்கை அடிப்படையில், நிதிநிலைமைக்கேற்ப புதிய மாணவியர் விடுதி தொடங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட அரூர் மற்றும் பாப்பிரெட்டிபட்டி அரசு கலைக் கல்லூரிகளுக்கு ஓராண்டுகாலம் நிறைவு பெறுகிறது. இந்தக் கல்லூரிகளுக்கு மாணவியர்கள் வெகு தூரத்திலிருந்து வந்து செல்வதால், விடுதி வசதியில்லாமல் தவிக்கிற ஒரு நிலைமை ஏற்படுகின்றது. இந்தக் கல்வியாண்டிலாவது அரூர் அரசு கலைக் கல்லூரிக்கும், பாப்பிரெட்டிபட்டி அரசு கலைக் கல்லூரிக்கும் மாணவியர் விடுதி கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு ஒரு விடுதி தொடங்கப்பட வேண்டுமென்றால், போதிய மாணவர்களின் எண்ணிக்கை, கட்டட வசதி, வாடகைக் கட்டடம் இருக்க வேண்டும். இவற்றின் அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இந்த நிதியாண்டிலே பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

166—

தரம் உயர்த்துதல்

***5454—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடம்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?